# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2024/47 - 2017 ජූනි මස 23 වැනි සිකුරාදා - 2017.06.23

*2024/47 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க
ஆரம்ப பிள்ளைப் பருவ நியதிச் சட்டம்

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஆரம்ப பிள்ளைப் பருவ நியதிச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் நிதி, திட்டமிடல், நீதி மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி நிர்வாகம், காணி, மின் சக்தி மற்றும் வலு சக்தி, நிர்மாணத்துறை மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அமைச்சர் தொன் ஆதர் சாமர சம்பத் தசநாயக்க ஆகிய நான், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை விதிக்கப்படுகின்றது என இங்கு அறியத்தருகின்றேன்.

டி. ஏ. சாமர சம்பத் தசநாயக்க,
ஊவா மாகாண சபையின் நிதி, திட்டமிடல், நீதி மற்றும்
சமாதானம், கல்வி, உள்ளூராட்சி நிர்வாகம், காணி,
மின்சக்தி மற்றும் வலு சக்தி, நிர்மாணத்துறை மற்றும்
கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர்
ஊவா மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2017, யூன் 14.

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஆரம்ப பிள்ளைப் பருவ நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளைகள்**

1. இக் கட்டளைகளை ஊவா மாகாணத்தின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி கட்டளைகள் என அறிமுகப்படுத்தப் படுவதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதி முதல் நடைமுறையில் இருக்கும்.

2. இதன் பின்னர் "கட்டளைகள்" என அறிமுகப்படுத்தப்படுகின்ற ஊவா மாகாணத்தின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி கட்டளைகள் தொடர்பாக ஏற்படுகின்ற ஏதேனுமொரு விடயம் தொடர்பாக இதன் பின்னர் "அமைச்சர்" என அறிமுகப்படுத்தப்படும் ஊவா மாகாண சபையின் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் வழங்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.


1A - PG 3582 — 17 (2017/06)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. (1) இதன் பின்னர் "நியதிச்சட்டமென" அறிமுகப்படுத்துகின்ற ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஆரம்ப பிள்ளைப்பருவ நியதிச் சட்டத்தின் 18.1 (அ) பிரிவிற்கிணங்க இதன் பின்னர் "நிலையம்" என அறிமுகப்படுத்துகின்ற ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி அபிவிருத்தி நிலையமொன்றின் பூமியும், அமைப்பும் கீழ் குறிப்பிடப்படும் வகையில் இயற்கை அனர்த்தம் மற்றும் விபத்துக்களுக்காக அமைந்திருத்தல் வேண்டும்.

(அ) பொய்கைகள், அணைக்கட்டுகள், நீரோடைகள், வாவிகள், தரிசு நிலங்கள், மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்கள், சரிவான இடங்கள், பாம்பு புற்றுகள் (பாம்புகள் வாழக்கூடிய) முற்செடிகள், ஊர்வன விலங்குகள் வாழும் காட்டு பிரதேசத்தை அண்மித்த பிரதேசங்களில் அமைத்தல் தகாது ;

(ஆ) மின் இணைப்புகள், எரிபொருள் நிரப்பிடல் சமிக்ஞை கம்பங்கள், திறந்த கிணறுகள் மற்றும் புகையிரத பாதையை அண்மித்த இடமாக அமைதல் தகாது ;

(இ) தொழிற்சாலைகள், கல் ஆலைகள், நெல் ஆலைகள், கற்குழிகள், கழிவுப் பொருட்களைக் குவிக்கும் இடங்கள், குப்பைகளை மீள்சுற்றோட்டம் செய்யும் இடங்கள் போன்ற இடங்களிலிருந்து ஐநூறு மீற்றர் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும் ;

(ஈ) அதிகமாக வாகனங்கள் பயணிக்குமிடங்கள், வாராந்த சந்தைகள், வாகனங்கள் பழுதுபார்க்கும் இடங்கள், இறைச்சி மற்றும் மீன் விற்பனை செய்யுமிடங்கள், பேரூந்து தரிப்பிடங்கள், மக்கள் செறிந்து வாழும் இடங்களிலிருந்து ஐநூறு மீற்றர் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும் ;

(உ) மதுபான விற்பனை நிலையங்கள், திரைப்பட நிலையங்கள், படப்பதிவுகளை விற்பனை செய்யுமிடங்கள், ஒலிப்பதிவு செய்கின்ற இடங்கள் என்பவற்றிலிருந்து, இருநூற்றி ஐம்பது மீற்றர் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும்.

(2) இந் நியதிச்சட்டத்தில் 18.1 (உ) பிரிவின் கீழ் பிள்ளைகளுடைய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்கின்ற கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (அ) முதல் (ஊ) வரையிலான ஒவ்வொரு பிரிவின் கீழ், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஒரு பொருள் அல்லது பலபொருட்கள் ஒவ்வொரு நிலையத்திலும் இருத்தல் வேண்டும்.

(அ) மேல் ஏறிச் செல்வதற்கான செயற்பாடுகள்

i வழுக்கும் படகு
ii மலை ஏறுதல்
iii ஏணிகள் (சிரட்டைகள், மரப்பலகைகள்)
iv சதுரவலை
v பிரமீட்களை அமைத்தல்
vi கோபுரங்கள்
vii பதுங்கு குழி
viii திப்பிலி மரம் ஏறுதல்.

(ஆ) நுழைந்து செல்வதற்கும் ஊர்ந்து செல்வதற்கும் தேவையான செயற்பாடுகள்

i தடிகள் மூலமாக ஆற்றிற்கு செல்லும் பாதை
ii பாய்கள் மூலமான சுரங்கமும், பெரல்கள் மூலமான சுரங்கமும்
iii சுரங்கத்துடனான அறைகள்
iv டயர் மூலமான பாதைகள்.

(இ) சமநிறைக்கேற்ப நடவடிக்கைகள்

i ஒற்றடையடி பாலம்
ii டயர் மீது நடத்தல்
iii சங்கிலிப் பாலம்
iv கொடிப்பாலம்
v சிரட்டை மற்றும் போலிக்கால்கள்
vi ஊஞ்சல்.

(ஈ) திட்டமிடல் செயற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள்

i நொண்டி ஆட்டம்
ii பல்லாங்குழி ஆட்டம்.

(உ) நடப்பதற்கு தேவையான செயற்பாடுகள்

i ஊர்ந்து செல்லல்
ii சுதந்திரமாக நடாத்தல்
iii பாக்கு மரகுற்றில் நடாத்தல்
iv புகையிரத வீதி.

(ஊ) பாய்வதற்கான செயற்பாடுகள்

i மணல்மூல கிணறு

(எ) எறிவதற்கேற்ப செயற்பாடுகள்

i பந்து எறிதல்
ii இலக்கிற்கு எறிதல்

(ஏ) ஏனையவைகள்

i விளையாட்டு வீடு
ii விளையாட்டு கடை
iii விளையாட்டு அலுமாரி

(3) நியதிச் சட்டத்தில் 18.1 (ஓ) சரத்தின் கீழ் நிலையத்தின் மரத் தளபாடங்கள் கீழ் குறிப்பிடப்படும் தரத்தை கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) வட்ட மேசையாயின், பரப்பளவு 3 அடியையும், உயரமானது 20 அங்குலமும் அகலம் மூன்று அடிகளையும், நீலம் 3 அடிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) கதிரைக்கான கால்களின் உயரம் 12 அங்குலமும், நீலம் 1 அடியையும், அகலம் 1 அடியையும் உயரம் 24 அங்குலத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4. (1) நியதிச் சட்டத்தில் 20 ஆவது பிரிவிற்கிணங்க நடாத்திச் செல்லப்படுகின்ற நிலையமொன்றில் அல்லது நிலையமொன்றை நடாத்துவதற்கு எதிர்பார்க்கின்ற சூழலில் கீழ் குறிப்பிடப்படுகின்ற வசதிகளை பெற்றுக்கொடுத்திருத்தல் வேண்டும்.

(அ) ஒவ்வொரு கட்டிடமும் நிரந்தர கட்டிடமாக அமைதல் வேண்டும் ;

(ஆ) கட்டிடத்தின் சுவர்கள் கட்டையானவையாயின் சம்பந்தப்பட்ட சுவர் ஒரு மீற்றரை விட உயரமாக இருக்க வேண்டியதோடு, மழை, கடும் சூரிய ஒளி என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும்;

(இ) பாதுகாப்பற்ற வகையில் பிரதான வீதி அமைந்துள்ள திசைக்கு எதிராக நிலையத்தின் பிரதான கதவை அமைத்தல் தகாது. பிரதான வீதிக்கு எதிராக ஒவ்வொரு நிலையத்திலும் பூமியிலிருந்து 2 1/2 அடி உயரமான மதிலொன்றையும் நான்கு அடி உயரமான வலையொன்றையும் பயன்படுத்தி மறைக்கப்பட வேண்டும் ;

(ஈ) நிலையம் அமைந்துள்ள காணியில் 1/8 பகுதி குறையாதவாறு மரஞ்செடி கொடிகள் அமைந்திருத்தல் வேண்டும் ;

(உ) கற்கை வட்டங்கள் வெளியரங்க விளையாட்டுகளுக்கு போதியளவிலான இடவசதிகள் இருத்தல் வேண்டும் ;

(ஊ) பிள்ளைகள் பயன்படுத்த கூடிய வகையில் தரையிலிருந்து 18 அங்குலம் உயரத்தில் சுவர் கரும்பலகையொன்று இருத்தல் வேண்டும் ;

(எ) தரை விரிப்புகள், பாய்கள் என்பன போதியளவில் இருத்தல் வேண்டும் ;

(ஏ) அறிவித்தல் பலகையொன்று இருத்தல் வேண்டும் ;

(ஐ) நுண்கலை உபகரணங்கள் போதியளவில் இருத்தல் வேண்டும் ;

(ஒ) தண்ணீரை பெற்றுக்கொடுப்பதற்கான வசதிகள் இருத்தல் வேண்டும். இன்றேல் தண்ணீரில்லாத சந்தர்ப்பங்களில் குடிப்பதற்கு நீரை பெற்றுக்கொள்ளக்கூடிய உயரத்தில் பாதுகாப்பான முறையிலும், தகுந்த முறையிலும் தண்ணீரை சேகரித்து வைத்திருத்தல் வேண்டும் ;

(ஓ) ஊனமுற்ற பிள்ளைகளின் தேவைகளுக்காக தேவையான வசதிகளும் ஏனைய வசதிகளும் இருத்தல் வேண்டும்;

(ஔ) சமயலரையொன்றும் அதற்கு உபகரணங்கள் அவற்றை உரிய முறையில் வைப்பதற்கான இடமொன்றும் இருத்தல் வேண்டும் ;

(க) சிறுவர் ஆக்கங்கள் மற்றும் முடிவுபொருள் கண்காட்சிகளுக்காக சுவரில் போதியளவான இடமும் அதற்குரிய காணிகளை ஒதுக்கி வைத்திருத்தல் வேண்டும் ;

(ங) பிள்ளைகளுடைய அறிக்கைகள், விளையாட்டு உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் பாதுகாக்க வேண்டியவைகளுக்காக களஞ்சிய அறையொன்று அல்லது வேறு வசதிகள் இருத்தல் வேண்டும் ;

(ச) கட்டிடத்திற்குள் உள்ள இடவசதிகளுக்கு ஏற்ப போத்தல்கள், பைகள், குடைகள் என்பவற்றை வைத்திருப்பதற்கு தேவையான இடவசதிகள் ஒதுக்கப்பட வேண்டும்.

5. சொற்கள் தொடர்பில் வேறொரு வகையில் அர்த்தமொன்று தேவைப்பட்டால் தவிர, இக்கட்டளைகளில் -

"அமைச்சர்" என்பது, ஊவா மாகாண சபையின் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களையும் ;

"நியதிச் சட்டம்" என்பது, ஊவா மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, ஆரம்ப பிள்ளைப்பருவ நியதிச் சட்டத்தையும் ;

"நிலையம்" என்பது சொல்லினால் ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்தி நிலையத்தையும் ;

"கற்கை வட்டங்கள்" என்பது கலாசார வட்டம், சுற்றாடல் வட்டம், வாழ்க்கைத் திறன் வட்டம் மற்றும் சுற்றாடல் ஆராய்ச்சி வட்டம்.

என கருதப்படுகின்றது.

6. இக்கட்டளைகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி சொல் அமுலில் இருக்கும்.

7- 209

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.